# சத்திய வேத பாதுகாவலன்

கத்தோலிக்க வார வெளியீடு

(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)


**நம் பத்திரிகை**

எமது அடுத்தவாரப் பத்திரிகை தொடர்ந்துவரும் விடுமுறை நாட்கள் காரணமாக வெளிவர மாட்டாது. மறுபடி 30-5-70 சனிக்கிழமையே வெளிவரும்.


95-ம் புத். | 1970-ம் ஆண்டு வைகாசி மாதம் 16-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 18-ம் இல.


## சமூக தொடர்பு சாதன தினம்

முற்காலத்தில் வேதப் பரப்புதல் வேலைகளுக்கு அச்சுப்பிரசுரமே மக்களிடையில் தொடர்பு ஏற்படுத்திவந்தது. ஆகவே அதை மக்களின் கவனத்துக்குக்கொண்டுவர அச்சுப்பிரசாரதினம் கொண்டாடப்பட்டது. ஆனால் இன்று அச்சுவாகனத்துடன், வானொலி, சினிமா, நாடகம், தொலைக்காட்சி முதலியன இவ் வேலையைச் செய்ய உபயோகப்படுகின்றன. ஆகவே இத்தொகுதி யாவற்றையும் மக்கள் கவனத்துக்குக் கொண்டுவர ஒரு விசேஷ தினம் கொண்டாடப்பட வேண்டுமென பரிசுத்த தந்தை சிலவருடங்களுக்கு முன் கட்டளைபண்ணியிருந்தார். அதைத் தொடர்ந்து வருடாவருடம் ஆரோகணத்திருநாளுக்கு அடுத்த ஞாயிறு சமூகத் தொடர்பு சாதனங்களின் தினம் கொண்டாடப்படுகிறது. இவ்வாறு இச் சாதனங்கள் செய்துவரும் வேலைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கவேண்டுமென்பது 2ஆம் வத்திக்கான் சங்கத்தின் முடிவுகளில் ஒன்று. இன்றைய உலகத்தில் இச் சாதனங்கள் மிகப் பெருமளவில் பெருகிவருகின்றன. எமது நாட்டிலும் வானொலிக் கருவிகள், சினிமாச்சாலைகள், அச்சுக்கூடங்கள், பத்திரிகைகள் எங்குபார்த்தாலும் மலிந்துகிடக்கின்றன. ஆகவே இச்சாதனங்களின்மூலமாக வேதப்பரப்புதல் வேலைக்குத் தொண்டுசெய்வதை ஊக்குவிக்க ஒரு விசேஷ தினம் குறித்தது மிகப் பொருத்தமானது என்பது வெளிப்படை. இவ்வருடம்

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

### ஒற்றுமைக் கருதினல் ஹில்டர் பிருன்டின் ருஷிய விஜயம்

92வயது நிரம்பிய ருஷிய தேச ஓதொடக்ஸ் கிறீஸ்தவசபைப் பிதாப்பிதா அலெக்சியஸ் சென்ற மாதம் மரணமானார். வத்திக்கானிலிருந்து ஒற்றுமை இயக்கக் காரியதரிசி ஹில்டர் பிருன்ட் அடிகளார், பிதாப்பிதாவின் மரண அடக்கச்சடங்குகளில் பங்குபெற மொஸ்கோ சென்றிருந்தார். கொமியூனிஸ்த அரசாங்கம் ருஷியாவில் நிறுவப்பட்டதன்பின் அங்கு சென்ற முதல் கருதினல் ஹில்டர் பிருன்ட் அடிகளாரே.

## மேற்றிராணித்துவ அபிஷேக 21ஆம் ஆண்டு நிறைவு

இம்மாதம் 22ஆம் திகதி நமது ஆயர் மிக வந். ஜே. எமிலியானுஸ்பிள்ளை அடிகள் ஆயர் பட்டம்பெற்ற 21ஆவது ஆண்டு நிறைவு விழாவாகும். கடந்த 21 ஆண்டுகளிலும் கடவுள் அவர் வழியாக யாழ் - மேற்றிராசன இறை மக்களுக்கு அரும்பெரும் அருளை அள்ளி அளித்திருக்கிறார். இதற்காக ஆயருடன் சேர்ந்து கடவுளுக்கு நன்றி கூறுவோம்.

இன்னும் பல ஆண்டுகட்கு ஆயர் நற்சுகத்துடன் வாழ்ந்து மறைப் பணியிலும், மக்கள் பணியிலும் கடவுளின் கருவியாகக் கண்ணியத்துடன் கடமைசெய்ய வேண்டுவோமாக.

'பாதுகாவலன்' ஸ்தாபனத்தின் பெயராலும் வாசகரின் பெயராலும் ஆண்டகைக்குச் சோபன வாழ்த்துக்களை வழங்குகின்றோம்.

## துப்பாக்கி முனையிலும் செபமாலை செபித்து மரணித்தனர்

தென் கிழக்கு ஆசிய தேசமாகிய கம்போடியாவில் வட வியட்னுமியரும் வியற்கொங்காரரும் குடிகொண்டு அங்குள்ள மக்களுக்குப் பெரும் கேடுகள் விளைவித்து வருகின்றனர். கம்போடியாவில் நூற்றுக்கு 80 வீதம் கத்தோலிக்க மக்களுடைய கிராமங்களும் உண்டு. அவற்றுள் ஒன்று சுறாயி சாங்வார் என்பது. அப்பகுதியை வடவியற்னுமியர் ஆக்கிரமித்து அங்குள்ள கத்தோலிக்கரை முன் வரிசையில் நிறுத்தி அவர்கள் பின்னே தாங்கள் நின்று அவர்களை எதிர்த்துவரும் கம்போடிய அரசாங்கத் துருப்புகளின் துவக்குகளுக்குப் பலியாக்கினராம். மரணத்தைத் தவிர்க்க முடியாத நிலையிலும் முன்னே நடந்துசெல்லும் போதும் செபமாலை கையில் ஏந்திச் செபித்தவண்ணமாக இவர்கள் இறந்தனர் எனச் செய்திகள் கூறுகின்றன.

## பாப்பரசரின் உகண்டா விஜயம் ஞாபகப்படுத்தப்படுகிறது

சென்றவருடம் பரிசுத்த தந்தை 6ஆவது சின்னப்ப பாப்பரசர் தென் அமெரிக்க கண்டத்திலுள்ள உகண்டா தேசத்துக்கு விஜயம் செய்தாரல்லவா? அவரது விஜயத்தினால் ஏற்பட்ட நற்பயன்களை விருத்தி செய்வதற்காக அத்தேச கம்போலா நகர அதிமேற்றிராணியார் முயற்சி செய்து வருகிறார். பரிசுத்த தந்தையின் விஜயத்தின் ஞாபக செயற்குழு ஒன்று நியமிக்கப்பட்டு இயங்கிவருகிறது. அதன்நோக்கம்:

1. பரிசுத்த தந்தை விண்ணப்பித்திருக்கும் ஒற்றுமை, பிறர்சிநேகம், ஒத்துழைப்பு ஆகியவற்றை அடைய செபித்தலும், செயலாற்றலும்.

2. இளைஞரிடையே நெருங்கிய உறவையும், கத்தோலிக்க சிவியத்தில் உற்சாகத்தையும் ஏற்படுத்தலும்.

3. உலகமக்களிடையே சகோதர அன்பை வளர்த்தலும், சமூகசேவா இயக்கங்களை நடத்துதலுமாம்.

## தென் ஆபிரிக்காவில் ஒருமித்த கிறீஸ்தவ எதிர்ப்பு

தென் ஆபிரிக்க றொடீசியா தேசத்தில் நிறத்தவர்களுக்கு எதிராக அத்தேச அரசாங்கத்தினால் இயற்றப்பட்டிருக்கும் அநீதியான சட்டங்களுக்கு அப்பகுதியில் 7 பிரதேசத்திலுள்ள சகல கிறீஸ்தவசபையினரும் எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்றனர். அப்பிரதேசங்கள்: தென் ஆபிரிக்கா, சம்பியா, மலாவி, பொற்ஸ்வானு, சுவாசிலாந்து, லொசேதோ, றொடீசியா என்பனவே. "கத்தோலிக்க, புறொட்டஸ்தாந்த கிறீஸ்தவ ஆலோசனைச் சங்கத்துக்குச் சேர்ந்த நாம் றொடீசியா தேச அரசாங்கம் அண்மையில் நிறத்தவர்களுக்கு எதிராக இயற்றி இருக்கும் சட்டங்கள் யாவும் மனிதத்தன்மையற்றனவாகையால் அவைகளை எங்களால் கூடியளவு எதிர்த்துநிற்க வாக்குப்பண்ணுகிறோம்" எனத் தத்தம் செய்திருக்கின்றன.

### கருதினல் சிலப்ஜியின் இங்கிலாந்து விஜயம்

ஊக்றேனியன் கிறீஸ்தவர்களின் கருதினல் சிலப்ஜி அடிகளார் உலகில் பெரும் கீர்த்தி பெற்றவர். 1945-ம் ஆண்டு தொடக்கம் 1963 வரையும் கொமியூனிஸ்த ருஷிய அரசாங்கத்தாரால் சிறையிடப்பட்டு பலவகைகளில் உபத்திரவப்படுத்தப்பட்டவர். தற்போது அவர் றோமாபுரியில் வாழ்ந்து வருகின்றார். இவர் இம்மாதம் ஆங்கிலநாட்டுக்கு விஜயம் செய்து அங்குள்ள பிரதான கத்தோலிக்க மேற்றிராசனங்களுக்கும் விஜயம்செய்ய இருக்கிறார்.

## செவாலியர் சூசைப்பிள்ளை அருளானந்தத்தின் மறைவு

வடஇலங்கையின் தலைசிறந்த அறிஞர்களிலொருவரும், யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரியில் சுமார் 35வருடங்களாகப் பேராசிரியராகக் கடமையாற்றியவரும், அர்ச். கிறகோரியாரின் நைற்பட்ட வர்த்தனருமான செவாலியர் சூசைப்பிள்ளை அருளானந்தம் அவர்கள் இம்மாதம் 9-ந்தேதி யாழ்ப்பாணத்திலுள்ள தமது இல்லத்தில் 84-ம்வயதில் காலமாயினர்.

அச்சுவேலியை ஜெனனபதியாகக்கொண்ட இவர் தமக்குள்ள அமைதி, அடக்கம், தாழ்ச்சி, பொறுமை, இன்சொல் ஆதியாம் சுகுணங்களால் சிறியோர் பெரியோரையும், வறியோர் செல்வந்தரையும், எல்லா மதத்தினர் இனத்தினரையும் தம்பால்இழுத்து எல்லோரினதும் அன்பையும் மதிப்பையும் பெற்றிருந்தார். இவரிடம் கல்விகற்ற பல நூற்றுக்கணக்கான மாணவர் இவரை ஒரு தெய்வம்போல மதித்து, பள்ளிக்கூடம் விட்டபின்பும் இவருடன் அன்புப்பிணைப்பில் கட்டுண்டிருந்தனர். ஆங்கில இலக்கியத்திலும் மதவரலாற்றிலும் செவாலியருக்கு இருந்த அறிவும் இவைகளைக் கற்றுக்கொடுப்பதில் அவர் காட்டிய ஆர்வமும், திறமையும் மறக்கற்பாலது. அவரால் படிப்பிக்கப்பட்ட மாணவர்களில் பொதுப் பரீட்சைகளில் சித்தியடையாதோர் இல்லையென்றே சொல்லவேண்டும்.

தேவபக்தி, குருபக்தி, நேர்மை, நல்லொழுக்கம் ஆதியாம்

(6-ம் பக்கம் பார்க்க)

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்"

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாழ்வை அளிக்கும் வல்லவா

—பவுலா—

உயிரெல்லாம் வாழ்வை நோக்கி வளர்ந்து செல்கிறது. உலகப் போக்கில் எம்மனிதனும் தாழ்வை விரும்பி வரவேற்பதில்லை. இங்நிலையில் உண்மை வாழ்வை அளிக்கும் வல்லவனை அறியின், அவன் காலடி சரணடையத் தயங்க மாட்டான்.

மனிதன் கீழ்ப்படிதலின்மையால், தான்என்ற பெருமையால் சிருஷ்டிகரின் உரிமையைத் தனதாக்கிக் கொள்ள முதற்பாவம் புரிந்தான். அன்று தொடங்கியது மனிதனின் வாழ்வில் தாழ்வு. இறைவனின் சிருஷ்டிப்பில் இழிகோலம், இன்பநிலை துன்பமாக மாறியது. மாசற்றநிலை மாசுற்றது. இந்நிலை கண்டு ஏங்கியது மனுக்குலம். ஆனல் மாசுற்ற மனிதன் மாசைநீக்க முடியாதவனுனன்.

ஆனல் இறையன்பு எல்லையில்லாதது; தன்னலம் அற்றது; அன்பில் வாழ்வது. இறைவார்த்தை, "தந்தாய் இதோ வருகிறேன்" என முன்வந்தார். என்னே! கடவுளின் மாண்பு! ஈனமனிதனை மீட்க, மாசற்றகடவுள் மனிதனுனர். "வார்த்தையானவர் மாமிசமாகி, எங்களுடனே வாசமாயினுர்.

கன்னியின் வயிற்றில் கருவுற்ற கடவுள் முப்பது ஆண்டுகள் தம்அருமைப் பெற்றோருக்கு அன்பு, சாந்தம், பணிவு இவைமூலம் சேவைசெய்து மறைந்தவாழ்வின் மாண்பினை எடுத்துக்காட்டினுர். மூன்று ஆண்டுகள் போதித்தார். ஆனல் போதனை மத்தியில் அவர்சாதித்தவைதான் அதிகம். சாதாரண தச்சன் மகனுக, கலாசாலைப் படிப்பறியா யேசு தூயஆவியின் ஞானமுடன் உலகிற்கு அளித்த அருங்கனிகள் அனந்தம். "நல்லமரம் நல்லகனி கொடுக்கும்." முட்புதரில் அத்திப் பழங்களைப் பறிப்பாருண்டோ? என்று மொழிந்தவர் அவர்தானே. அதன் நிறைவும் அவரேதான். இதுதான் அவரது தாழ்மை. எளிமை பொருந்தியபகிரங்கவாழ்வின் மாண்பாகும்.

கல்வாரிக் குன்றில் கள்வர் இருவர்நடுவில் கொலையுண்ட நாதன் அக்கழுமரக் கொலை மூலம் எம்மவர்க்கு வாழ்வளித்தார். கடவுளின் தாழ்வில் மனிதன் வாழ்வுபெற்றுன். மனிதஆன்மா உயர்வடைந்தது. இதைச்சிந்திப்பவர் எத்தனைபேர்? ஆம், பலபேர் சிந்தித்தார்கள். பரமனின் வாழ்வில் பங்குகொண்டார்கள். மீட்புப்பணியில் தம்மையும் தாழ்மையுடன் பங்குகொள்ளச் செய்தார்கள். நீ வாழ்வு பெற வேண்டுமா? மற்றவர்களை வாழச்செய். உன்வாழ்வை அழித்துக்கொள். "தன் உயிரைக் காப்பாற்ற விரும்புகிறவன் அதை இழக்கிறுன். அதை இழப்பவனே நித்தியத்திற்கும் அதைக் காப்பாற்றிக் கொள்கிறுன்." இறைவன் விரும்பும் வழியில் அன்புடன் செலவிடு.

"அவர் வளரவும் நான் மறையவும் வேண்டும்." உயிர் கொடுத்த வள்ளல், தனிமையுற்றோருக்குத் துணையாகவும் அமைதியற்றோருக்கு ஆறுதலாகவும், அன்பை விழைவோருக்கு அன்பாராகவும் உலக முடிவு பரியந்தம் நம்மூடன் வாசம் செய்கிறுர். வாழ்வை விளைவோர் வாழ்விக்கும் அவ் வள்ளலிடமே செல்லவேண்டும். அவரிடமின்றி வேறு எவ்விடமும் நாம் உண்மை வாழ்வைப் பெற முடியாது. அணுக எளியராய், அன்பின் வடிவாய், அப்ப உருவமாய் மறைந்துள்ள அம் மன்னனிடம் செல்ல அரச பரிவாரம், அணிநடை வேண்டியதில்லை. தாழ்ந்த உள்ளமே வேண்டும். தாழ்ச்சி உள்ளவனே யேசுவைத் தன்னில் கொள்ளுவான். வானுலக மாட்சி துறந்து மண்ணுலகம் வந்து மனிதனை வாழ்விக்கவந்த வள்ளல், அகங்காரிகளைத் தன்னலம் உற்றோரைத் தேடமாட்டார். இதற்கு அவர் வாழ்வே சான்று. பாவி மக்தலேனைப் பிரிய நண்பியாக, ஆயக்காரன் மத்தேயுவைப் பிரிய சீஷனுக, மறுதலித்த இராயப்பரைச் சீஷரில் முதல்வராக, கள்வனைத் தன்னுடன் பரகதி வரும் துணைவனுகக் கொண்ட எம் நல்ல அன்பர் உடைந்த உள்ளத்தை மன்னித்து, மனமுவந்தேற்பார். அன்பில் விசேஷ நிலை கொடுப்பார்.

ஆனித்திங்கள் நற்கருணை வாழ் நாயகனின் திருவிழா நாள் வரும் திங்கள். விழாக் கோலம் போடுமுன் நாம் எம் மனக்கோலம் போடுவது தான் சிறந்தது. வாழ்வளிக்கும் வள்ளல் பன்முறை எம் நாவில் வந்தார். உள்ளத்தில் உறைந்தார். ஆனல், நம்மில் எத்தனைபேர் அதை உணர்ந்தோம்? அந்நாவால் ஆபாச வார்த்தை, பொய் வதந்தி, ஆவலாதி, அவதூறு, கோள், குண்டணி, குறை கதைத்தோம், பரப்பினேம்; உள்ளத்தில் கோபம், வைராக்கியம், பகை, பொறாமை, பூசல் வைத்தோம். இவை யாவையும் நாம் சிறிதேனும் களையத் தெண்டிப்போம். இல்லாவிடில் எம் வாழ்வு வெறும் வாழ்வு. எங்கள் விசுவாசம் பயனற்றது. ஆண்டுகள் பல கடந்தும் நாம் வாழ்விழந்தவராவோம். ஆகவே, நாமெல்லோரும் நற்கருணை நாதனை "வாழ்வை அளிக்கும் வல்லவா! தாழ்ந்த என்னுள்ளமே வாழ்வின் ஒளியை ஏற்றவே எழுந்து வாருமே" என்று உண்மை அன்புடன் புகழ் பாடி வரவேற்போம்.

## புனித ஆவியில்...

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

னில் அன்பே கடவுள்" (1 அரு. 4-8) தேவ ஆவி அளிக்கும் ஒருமைப்பாட்டை சமாதானம் என்னும் பிணைப்பால் காப்பாற்றக் கண்ணும் கருத்துமாய் இருங்கள்" (எபே. 4-3).

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு; ஒற்றுமைநீங்கில் அனைவருக்கும் தாழ்வு" என்பர். ஒன்றுபட்டு புனித ஆவியில் வாழ்ந்தால் நல் வாழ்வைக் காண்போம்.

✳ புனித ஆவியில் புனித வாழ்க்கை அமைக்கவேண்டும். "நீங்கள் ஊனியல்புக்கு ஏற்றபடி நடந்தால் சாகத்தான்போகிறீர்கள். ஆனல் ஆவியானவரின் செயலால், உடலின் செயல்களைச் சாகடித்தால வாழ்வீர்கள்" (உரோ. 8-13) என்கிறுர் மறை போதகர் புனித சின்னப்பர். சரீர இச்சைக்கு உட்பட்டு நமது வாழ்வு இயங்குமாஞல் அது நமக்கு நித்திய சாவைக் கொணரும் மாருக ஞானம்—புத்தி—அறிவு—விமரிசை—திடம்—பத்தி—தேவபயம் என்ற அவர் கொடைகளைப்பெற்று ஆவியில் வாழ்ந்தால் நித்திய பேரின்பவாழ்வைக் கண்டடைவோம்.

ஆகவே புனித ஆவியின் உதவியை நாடுவோம்; அவரது கொடைகளை இறைஞ்சுவோம்; அவரது அன்பினைத் தேடுவோம்; அவர் பிரசன்னத்தை உணர்வோம்; அவரை மனம்நோகச்செய்யோம்; அவரைப் புறக்கணியோம்; உடல் இச்சைப்படி நடவோம்.

போராட வாழ்வு நடத்துவோம்; அவர் பிள்ளைகளாக இருப்போம்; அவர் ஆலயமாகத் திகழ்வோம்; அவர் ஒன்றிப்பை நாடுவோம்; உடலைப் புனிதமாகக் காப்போம்; உள்ளத்தைத் தூய்மையாகப் பேணுவோம்.

புனிதஆவியில் வாழ்வோம்!
-அன்புவாழ்வு காண்போம்!
வருவாயே பரஞ்சோதி!
வரமேழும் தருவாயே
அருள்சோதி!

ச. வில்பிறெட்—மறைஆசிரியர்

# அன்னை அருள் தர....!

சித்திரையின் நித்திரையில் வந்தது வைகாசி. வைகாசியின் வனப்பை வர்ணிக்கத்தான் வாயில் வார்த்தைகள் வரவில்லை. கோலமிட்ட நீல வானம்! பழையன கழிதலும் புதியன புகுதலும் என்ற கோட்பாட்டுக்கியைய காலத்தின், கோலத்தின் பசிய இலைகளைச் சருகாக உதிர்த்து இளம்பசுமை கொண்ட பசிய தளிர்களைத் தாங்கிநிற்கும் விருட்சங்கள்! பசுந்துளிர்களைக் கோதிவிளையாடும் குயிலினங்கள் கூ... கூ... என்று குரல்எழுப்பிக் குதூகலிக்கின்றன.

கொடியும் கொம்பரும் கொத்துக்கொத்தாய் வண்ண மலர்கள் கண்ணைப் பறித்துப் பூத்துக் குலுங்குகின்றன. தேனுண்ணும் வண்டு ரீங்காரங் கொண்டு வண்ண மலர்களை வட்டமிட்டு வருகின்றது. கனிதரு மரங்கள் கனிதாங்கி நிற்கும் கண்கொள்ளாக் காட்சி. ஆம், வைகாசியின் வரவைக் கட்டியங்கூறிக் காட்டிநிற்கின்றன.

ஆம், அன்னையின் அருள் தர வந்தது வைகாசி! ஆலயத்திலே அன்னைக்கு வழிபாடு! அன்னையர் இல்லத்திலும் கன்னிமரிக்கு வழிபாடு! வைகாசியே வனப்புடன் விளங்குகையில் வானவர் ராணியை நாம்மட்டும் வாழ்த்தாதிருக்க முடியுமா? வாழ்வளிக்கும் வானவர் ராணியை, அனைத்துலக அன்னையை அனைவருடனும்சேர்ந்து அடிபணிவோம். ஏன்......? அவள் தாங்கினல் சாய்ந்து விழமாட்டோம; அவள் பாதுகாத்தால் பயம் கொள்ளோம்; அவளைப் பின் சென்றல் வழிதப்பமாட்டோம் என்றும், "மரியாயின் பிள்ளை ஒருபோதும் கைவிடப்பட மாட்டாது என்றும் அன்னையின் புனிதர் எனப் புகழ்பெறும் புனிதபேர்ணுட் கூறியுள்ளார். வேறு... "உம்முடைய உபகார சகாயங்களை யிரந்து... கைவிடப் பட்டதாக ஒருவரும் சொல்லக் கேள்விப் பட்டதில்லை என்று நினைத்தருளும்" என்ற அன்னையின் செபத்தை மேற்படி புனிதரே ஆக்கித்தந்துள்ளார்.

எனவே, செபமாலையும், மலர்மாலையும் சேர்த்து அன்னைமரிக்குச் சூடுவோம்; பாமாலை பாடி கன்னிபுகழ் பாடுவோம். அவள் பாதார விந்தங்களை என்றும்தேடுவோம். வைகாசியில் மட்டுமல்ல, வாழ்க்கையின் ஒவ்வொரு நாளையும் அன்னைமரிக்கே அர்ப்பணித்துப் பயனடைவோம். இதோ ஆலயமணி அனைவரையும் அழைக்கிறது. மாலை வேளையிது; மாதாவின் பாதமது கூடுவோம், அவர்புகழ் என்றும் பாடுவோம். தினமும் அவள்பாதம் நாடுவோம்.

வனப்புமிகு வைகாசியே அன்னை வனப்பினைப் புகழ் வாய் வையமதில்.

இ. பே.

---

### திரு. சவரிமுத்து டானியேல்
**அவர்கள் அமரபதமடைந்த**
## 9-ம் வருட ஞாபகம்

பிறப்பு: 29-9-1903 — இறப்பு: 21-5-1961

நித்திய பிதாவே! உமது திருக்குமாரனின் விலைமதியாத திரு இரத்தத்தைப் பார்த்து உத்தரிக்கிற ஆத்துமாக்கள் பேரில் இரக்கமாயிரும்.

எங்களைவிட்டுப் பிரிந்தும் எங்கள் ஞாபகத்தை விட்டுப் பிரியாத சவரிமுத்து டானியேல் அவர்களுக்கு நித்திய இளைப்பாற்றியைக் கொடுத்தருளும் சுவாமி, முடிவில்லாத பிரகாசம் இவருக்குப் பிரகாசிக்கக்கடவது, சமாதானத்தில் இளைப்பாறுவாராக, ஆமென்.

இவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காகக் கொட்டாஞ்சேனை சந்தஆசியா தேவாலயத்திலும், ஊர்காவற்றுறைப் புனித அந்தோனியார் தேவாலயத்திலும், கிளிநொச்சிப் பரிசுத்த பாத்திமாமாதா தேவாலயத்திலும், குருநகர் பரிசுத்த புதுமை மாதா கோவிலிலும், நாயக்கர்கந்தை நல்லாயன் கன்னியர் மடத்திலும் 21-5-70 வியாழக்கிழமை திருப்பலி பூசைகள் ஒப்புக்கொடுக்கப்படும். இப்பலிகளிற் பங்குபற்றுவோர் அன்னாரின் ஆத்தும இளைப்பாற்றிக்காக இப் பலிகளை ஒப்புக்கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

இவரின் பிரிவால் துயருறும் மனைவி அற்புதமும், மூத்த சோதரன் சவரிமுத்து வஸ்தியாம்பிள்ளையும்.

89, வால் வீதி,
கொழும்பு 13.

---

**பாக்கியம்**
அவர்களின்
## மரண ஞாபகம்

பிறப்பு: 12-3-41. இறப்பு: 23-4-70.

"சீவியத்திலும் என்னை நேசித்தவர்களே மரணத்திலும் மறவாதீர்கள்."

எமது அன்புச் சகோதரியும், அருமை மகளுமான பாக்கியம் இறைவனடி சேர்ந்த ஒரு மாதம் பூர்த்தி அடைகிறபடியால் அவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இராகலை பரிசுத்த செபமாலை மாதா ஆலயத்தில் 26-5-70-ம் திகதி காலை திவ்விய பாடற் பூசை ஒப்புக் கொடுக்கப்படும். இதைக் கண்ணுறும் வண. குருமார், கன்னியர், கிறிஸ்தவர்கள் அனைவரும் இவரின் ஆன்மசாந்திக்காக வேண்டிக்கொள்ளும்படி தயவாகக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

பிரிவால் துயருறும்: பெற்றோர்: மரியம்மாள்-சின்னப்பன். சகோதர சகோதரிகள்: பிரான்சிஸ், வியாகுலமேரி, செசி, பிலோமினு. அவரின் கணவரும் புதல்வியும்: ஜோசப், சகாயம் மற்றும் இனசனர்.

சென். லெனுட்ஸ்
இராகலை,
ஆள்கருணேயா. 61/70.

---

### சூசை பிலிப்பு திரவியம்
அவர்களின்
## 1-ம் ஆண்டு நிறைவு தினம்
**18-5-70**

"சீவியத்தில் இவரை நேசித்தவர்களே மரணத்திலும் மறவாதீர்கள்"

ஆண்டொன்று உருண்டோடிவிட்டபோதும் அன்பு உருவம் ஒருநாளும் மறந்தோமில்லை. தூண்டுகின்ற அன்போடு துடிக்கின்றோம் உங்கள் புகழுக்கோர் அழிவுமில்லை எங்கள் கவலைக்கோர் கரையுமில்லை.

இதைக் கண்ணுறும் அன்பர்கள் அனைவரும் அர்ச். கொஞ்சேஞ்சி மாத ஆலயத்தில் 18ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6-15 மணிக்கு ஒப்புக்கொடுக்கும் துக்கப்பாடற் பூசைப்பலியில் பங்குகொண்டு அன்னுரின் ஆத்துமம் தூயபரன்அடிகளில் சாந்தி கொள்ள செபிக்குமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்ளும்

மனைவி மக்கள்

25/2 மத்தியூஸ் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

---

### நன்றித்துதி

திருஇருதய ஆண்டவரின் இரக்கத்தாலும், புனிதர்கள் சதாசகாயமாதா, யூதாததேயு, சூசையப்பர், அந்தோனியார், மடுமாதா, அன்னம்மாள், திரேசம்சாள் இவர்களது மன்றுட்டுக்களினுலும், நான் பெரும் ஆபத்துக்களிலிருந்து மீட்கப்பட்டு இவர்களிடம் கேட்டுக்கொண்ட காரியங்களையும் குறைவில்லாமல் நிறைவாகப் பெற்றுக்கொண்டேன். இவர்களது நாமம் எங்கும் புகழப்படுவதாக.

ஓர் அடியான்.

வங்காலை .60/70.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்பதற்கொப்ப இப் புவிதனில் நம்மைப்படைத்த தெய்வத்திற்கு அடுத்தாற்போல் நம்மைப் பெற்றெடுத்த தாய் தந்தையரே எம் கண்கண்ட தெய்வமாகும். இவ்வுலகில் நாம் பெறுதற்கரிய செல்வம் நம் தாய் தந்தையராவர்.

அன்னையானவள் பத்துத் திங்கள் சுமைதாங்கிக் குழந்தையைப் பெற்றெடுத்துப் பாலூட்டிச் சீராட்டி, இரவென்றும் பகலென்றும் பாராது கண்விழித்துப் பல இன்னல்களையும் அனுபவிக்கின்றாள். இந்தக் குழந்தையைப் பெற்றெடுத்ததோடு அவள் அனுபவித்த துன்ப துயரங்களையெல்லாம் மறந்து ஆனந்தக் கண்ணீர் சொரிகின்றாள். தனக்கு எவ்வித துன்பங்கள் நேர்ந்தபோதிலும் அவற்றையெல்லாம் நொடிப்பொழுதில் மறந்து ஆனந்தக்கடலில் மிதக்கின்றாள்.

கண்ணை இமை காப்பது போல சிசுவைக் காத்துச் சீர் சிறப்புடன் வளர்த்துவருகின்றாள். தன் சிசுவை வளர்க்க அவள் படும் கஷ்டம்தான் எத்தனை! இத்தனை சிறப்புடன் வளர்க்கப்பட்ட பிள்ளை எண்ணிரண்டு வயதானவுடனே அவளை மதிப்பதுமில்லை, அவளுக்குக் கீழ்ப்படிவதுமில்லை.

# தாய்

இந் நிலையைக் காணும் அத் தாயுள்ளம் என்ன பாடுபடும்? நம்மைப் பெற்றெடுத்த தாய் நமக்குச் செய்த உபகாரங்களுக்குக் கைம்மாருக நாம் பன்மடங்கு சேவை செய்ய வேண்டும். நாம் அப்படி ஏதும் உதவிசெய்கின்ருேமா? அவள் செய்த உபகாரத்துக்குப் பதிலாக அபகாரம்தான் செய்கிறோம். இனியாவது நாம் நம் அன்னையைக் கோவில் எனப் போற்றவேண்டும். இது பற்றியே "தாயிற் சிறந்தொரு கோவிலுமில்லை" என்றுர் நம் பெரியோர்.

அன்னைக்கு அடுத்தாற் போல் எம்மைக் காப்பது நம் அருமைத் தந்தையே. தாய் மட்டும் தன்னந்தனியே இருந்து எம்மைக் காப்பாற்ற முடியாது. அதற்குத் தந்தையின் உதவியும் தேவை. ஆதலாலே தந்தை நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த அல்லும் பகலும் அயராது உழைத்து உணவூட்டுகிருர். எதற்காக அவர் அவ்வாறு கஷ்டப்பட வேண்டும்? நாம் பருவம் அடைந்து கல்விச் செல்வத்தைப் பருகி, படித்துப் பட்டம் பெற்று உயர்ந்த பதவியை அடையவேண்டும் என்பதற்காகவே.

# பேண்

"தந்தை சொல் மிக்க மந்திரமில்லை" என்பதற்கிணங்க, சிறுவயதிலிருந்தே நம் தந்தை நமக்குப் புகட்டும் புத்தியையும் நல்ல வார்த்தைகளையும் கேட்டு அதன்படி ஒழுகுதல் வேண்டும்.

பெற்ருேர்கள் பிள்ளைகளின் வாழ்வே தம் வாழ்வெனவும், அவர்களின் இன்பமே தம் இன்பமெனவும் நினைத்துக் கொண்டு கற்பனை உலகிலே சுற்றுகின்றனர். ஆனால், பிள்ளைகளோ நாகரீகம் மிக்க

செபஸ்டியம்மாள்
ருகல.

இக்காலத்திலே நாகரீகம், நாகரீகம் என்று நாகரீகத்தை நாடிச்செல்கின்றனர். இப்படியே நாகரீக மோகத்தில் மூழ்கி, அலங்காரமும் பணப்பித்தும் பிடித்து மனம்போன போக்கிலே திரியும் பிள்ளைகளுக்குப் பெற்ருேர் நினைவு வருமா? தாங்கள் சிறுவயதில் அனுபவித்த இன்ப துன்பங்களையெல்லாம் மறந்து, இப்போது படித்துப் பட்டம் பெற்று உத்தியோகத்தில் இருந்தால் போதுமா? அவர்கள் இவ்வளவு தூரம் மரியாதையுடன் வாழச் செய்தவர் யாவர்? அவர்களின் பெற்ருேரே இதற்குக் காரணம். "பெற்ற மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு" என்பதைப்போல் பருவமடைந்த பிள்ளைகள் பெற்ருேரைப் பார்த்து எள்ளி நகையாடுகின்றனர். உலகப் பற்றைவிட நமக்கு பெற்ருேரின் அன்பு மேலானது. அவ்வன்பையும் புறக்கணித்துவிட்டுச் செல்கின்ற இவர்கள், "ஈன்ருள் மனமெரிய, வாழாய் ஒருநாளும்" என்ற பொன்மொழியை மறந்தனர் போலும்!

தெய்வத்திற்கு அடுத்தாற் போல் பெற்ருேரையே நாம் தெய்வமெனப் போற்றவேண்டும். அவர்கள் நோயுற்றாலும், முதுமை எய்தியும் இருக்கும் நேரத்தில் அன்புடன் பராமரித்து, அவர்கள் மனம் கோணுமல் நடத்தவேண்டும். அவர்களின் வியாதிக்கு நாம் காரணமாக இராமலும், வியாதி வருத்தங்களில் நாமும் பங்கெடுத்து அவர்களுக்குவேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டியது எமது கடமையாகும். பெற்ருேர் முதுமை எய்திய காலத்தில் பிள்ளைகளின் கையைத்தான் நாடி நிற்பார்கள். ஆதலால், அவர்களின் முதுமையில் அவர்களைக்காப்பாற்றி அவர்கள் இறந்தபோது ஈமக் கடன்களைச் சரிவரச் செய்து, அவர்களை நினைவுகூர்ந்து வணங்குதல் வேண்டும்.

எனவே, நாகரீகமோகத்தை விடுத்து, "தந்தைதாய் பேண்" என்பதற்கிணங்கப் பெற்ருேரைப் பேணி நடப்பதே நம் முதற் கடமையாகக் கொண்டு வாழ்வோமாக!

# தீபமும் தெய்வமும்

—:( பெரிய கட்டைக்காட்டுப் புலவர் ):—

1

தன்னினையே சார்ந்தபொரு ளனைத்தும் நீங்காத்
தாவியெழுந் துட்புறமு மொன்ற தாகத்
தன்மயம தாகமிகத் தூய தாக்கித்
தருவதுவும் மூலகு ளோர்க் குதவியாக
நன்னயமாய் விழங்குவதும் புராதனத் தோர்முன்
ஞானமிகு மறை வழுவாப் பரற்கன்பாக
உன்னரிய பலிப்பொருளை உகந் தளிப்பார்
ஓங்கியெழுந் தழல்வீசுந் தகனத்தீயில்

2

மோனமிகு முனிவரதன் மோசே சென்பான்
முதிர்வனத்தின் மலைச்சார்பிற் கொறிகள் மேய்க்க
தானறியா தொருவன்தன் பேரைக் கூவத்
தனைமறந்தே அதிசயித்து ஏங்கி நிற்க
ஈனமிலா தவன் கிளையை மீட்டிடவே
ஏந்தலெனும் பார்போனி னிடத்திற் போக
ஞானமிகும் பரன்வாக்கு கொடுத் ததுவும்
நறுமலர்ப்பூத் தருவினெழுந் தீயினின்றே

3


அருள்மறையின் திருவிளக்காய் விளங்குந் தூய
அருந்தவனும் இசையாசு தனக்கு முன்னம்
பொருள்வளரும் வருங்கால முணர்ந்து ஞானம்
புந்திதனிற் பூத்தெழுந்து மனற் கன்பாக
குருமுறையா யுபதேசம் வழங்க நாவின்
கொன்னைமொழி தட்டாது குறையை நீக்க
அருவுருவ தானபரன் ஏவவா னோன்
அணிமலர்ப்பூங் கைவிரலால் தொட்டதுந் தீயே

4

எகிப்தரசன் இட்டசிறை யதனுல் மீட்டு
இசிறேயல் தன்கிளையைச் செங்கடலைத் தாண்டி
முகிற்பதியும் மலைச்சார்பின் வனத்தி னூடாய்
முடிவிலா னுரைப்படியே காஞன் செல்ல
சகிக்கரிய இரவினிருள் கரந்து போகத்
தவமுனிமோ சேதனக்கு உதவி யாக
மிகப்பெரிய ஒளி விளங்குந் தூணதாக
விருப்புடனே வழித்துணை யாய்ப்போனதுந் தீயே

5

ஒருமாது புரிந்தபெரும் பழியைத் தீர்க்க
அருள்மாது மகனுக உதயமாகிக்
குருஞான உபதேசம் உரைத்து ஈனர்
கொடுமைபல ஏற்றுமரக் குருசில் மாண்டு
ஒருமூன்று நாளதனி லுத்தான மாகி
உம்பரனூர் அம்பரம்போய் பத்தாம் நாள்
உரியதவச் சீடரிடந் தூய ஆவி
ஒரேழு நாவடிவாய் வந்ததும் தீயே.




அன்புள்ள தம்பி-தங்கையரே வணக்கம்!

எமது ஞான மேய்ப்பரது அபிஷேகத்தின் இருபத்தொராவது வருடம் அடுத்துவரும் இருபத்தொராம் தேதி வியாழக்கிழமை பூர்த்தியாகும். மேய்ப்பன் என்பது போஷிப்பவன் என்றும், வழிகாட்டுவோன் என்றும் கருத்தடங்கியுள்ள ஒரு சொல். எப்படி ஒரு தகப்பன் இயற்கையில் தனது பிள்ளைகளைப் போஷித்து வழிநடத்த வேண்டிய கடமை பூண்டவனுயிருக்கின்ருனே, அங்ஙனமே ஞானமேய்ப்போராகிய மேற்றிராணிமாரும் தங்களது மந்தைகளாகிய கிறிஸ்துவர்களை ஞான போதகத்தினுல் போஷித்துச் சன்மார்க்கவழிகளில் நடத்திவரும் கடமை பூண்டவர்கள்.

அப்போஸ்தலர்களுடைய ஸ்தானத்தில் இருக்கிறவர்கள் அவர்கள். மேற்றிராணி ஆண்டவர் மூலமே ஒரு மேற்றிராசனத்தில் கிறிஸ்தவர்களுக்கும், திருச்சபையின் திரவியங்களைப் பெற விரும்புவோருக்கும் ஞான நன்மைகள் கொடுக்கப்படுகின்றன. மோட்ச திரவியங்களை இவ்வுலகிற்குக் கொண்டுவருவனவாகிய தேவதிரவிய அனுமானங்களை நிறைவேற்றும் குருமாரை அபிஷேகம்பண்ணுவோர் மேற்றிராணிமாரே. பரிசுத்த ஆவியை எமக்குத் தரும் தேவதிரவிய அனுமானமாகிய உறுதிப்பூசுதலை எமக்குச் சாதாரணமாய்த் தரக்கூடியவர்கள் அவர்களே. குருமாரையும், விசுவாசிகளையும் தமது மேற்றிராசனத்தில் நற் பாதையில் நின்று தவருமல் வழிநடத்தி வருபவர்கள் அவர்களே.

ஆகையினுற்ருன் கிறிஸ்துவ பிள்ளைகளாகிய நாம் எமது மேற்றிராணியாருக்காக மன்ருடவேண்டும். பாப்பரசரின் கீழ் எமது மேற்றிராசனத்தையிட்டுத் தேவ சமுகத்தில் பொறுப்புக் கொடுக்க வேண்டியவர் அவரே. தமது பொறுப்பை இவ்வுலகில் தக்க முறையாய்ப் புரிவதற்குத் தேவ உதவி மேலும் மேலும் அவருக்குக் கிடைக்கும்படியாய் மன்ருடுங்கள்.

— அண்ணு

# பூங்காற்று

சி. சுதந்திரராஜ்

கருப்பஞ் சாற்றுக் கவிதையோதி
கன்ன லமுதுக் கிதமாக்கி
உருக்கு முள்ள நடமுமாடு
முருவ மில்லாப் பூங்காற்றே!

உந்த னுருவத் தழகுதனை
உள்ளங் கவர்ந்திடு மாயத்தை
இந்தப் பனுவல் ஜாலமதால்
ஈண்டே ஆய்ந்து சொல்லிடு நீ!

சுகந்தம் சுகந்தம் சுகந்தமென்றே
சகத்தோர் செப்பிடு மென்காற்றே
சுகந்த மூட்டும் மருந்ததனை
குடைந்தே நீயும் பெற்றதெங்கே!

கடலின் அலையிற் துயில்கின்ருய்
கடவுளர் மனிதனிற் கலந்திடுவாய்
மடலினை விரித்திடு மலர்களிலே
மணமதை அள்ளித் தருகின்ருய்!

உன்னைப் பிடித்திட முடியாதே
உணர்வுத் துடிப்பிடை தவித்திடுமென்
தன்மை உய்த்திட மாட்டாயோ
தவிப்பைத் தவிர்த்திட வாராயோ!

கடின உழைப்பு இல்லையேல் வாழ்க்கையில் நாம் பிரமாதமாக ஒன்றும் சாதித்து விட முடியாது.

— அர்ச். யெரோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வு அளித்த வள்ளல்

(செல்வி றீற்று கொன்ஸ்ரன்ரைன் — அச்சுவேலி)

உயிர்த்த ஆண்டவரின் உயர்த்திய கரங்கள் எம் அனைவரையும் ஆசீர்வதித்த வண்ணம் எம் வழிகாட்டியாக அமைந்திருக்கின்றன. அவரது திறந்த ஐந்துகாயங்கள் எமது இன்பதுன்பங்களில் தஞ்சமாக இருக்கட்டும். கல்லறையைத் திறந்த வல்லமை எங்கள் பெலமாக இருக்கட்டும். எதிரிகள் முன்னால் எடுத்துரைத்த ஏழு அன்பு வாக்கியங்களும் எங்கள் முன்மாதிரிகையாகஇருக்கட்டும். திட்டலும் தீமையும் கிட்டியபோதும் வாய் திறந்து எவ்வார்த்தையும் சொட்டாது தன் பிதாவின் திட்டம் தீட்டியவரின் வாழ்வு எங்கட்கு வழிகாட்டட்டும்.

யேசுவின் போதனைகளையும் சாதனைகளையும் கேட்கச் சகியாத துட்டத் துரோகிகள் திட்டம் தீட்டினர். மட்டம்தட்டினர். வாட்டசாட்டமாக வளைத்துப் பிடித்தனர். சென்றனர், பிலாத்துவிடம்; பொரிந்து தள்ளினர் பொய்ச்சாட்சிகளை; அகப்பட்ட மிருகத்தைப்போல் அடித்தனர் சாட்டைகளால்; சூட்டினர் முள்முடி; கொடுத்தனர் பரிகாசக்கோல்; இரத்தம் பாய்ந்தது; இராப் பகலாய்ப்பாய்ந்தது; வேதனைக்குள்ளானார். அதுமட்டுமா? தேவகுமாரனின் கதியா இது? அல்லது...? அதுவும் போதாதென்று சுமத்தினர் சிலுவை; அணைத்தெடுத்தார் அன்புக் கரங்களால். இக்கட்டான நிலைமைகட்கூடாக மறுத்தாரா?...... அணைத்தெடுத்தார்; உலக மக்களின் மாசுகளைத் தான் அணைத்தார். அதைச் சுமந்தார்; சுமந்து கொண்டே சென்றார். தன் பிதாவின் திட்டத்தைத் தீட்டியவரின் வாழ்வு எங்கட்கு வழிகாட்டட்டும்.

உண்மையே சொன்னார்; நன்மையேசெய்தார்; ஆனால் உலகம் கொடுத்தது என்ன? இராஜபதவியையா? இல்லை: சிலுவை மரத்தை. நல்லவனை நோக்கி நின்றது உலகம். இரட்சகர் இல்லையே...என்று ஏங்கித் தவித்தது உலகம். வந்துதித்தார் கடவுள் மனிதனாக. மனிதனை மனிதனாக வாழவைத்தார். ஆனால் உலகம் அவரைக்—கடவுளைக்—கடவுளாக வாழவைத்ததா?

"நன்மை புரிந்தோனுக்கு தீமை" புரிவதுதான் மனித இயல்பு? என்னவோ?...... அவன் இயல்பும் அதுவாயிற்றே.

மனிதனாகப் பிறந்து மனிதனாக வாழ்ந்து கடவுளாக உயிர்த்த அவரின் புதுமை வாழ்வுதான்என்னே! வாழ்க்கையின் கருத்தைச் சொல்லிலே செயலிலே எடுத்துரைத்தார். தன்னை மறந்தார்; எம்மிடம் வந்தார். ஆனால் நாம் என்ன செய்தோம்? தம்மை மறந்து எமக்கு நல்வாழ்வழிக்க வந்தவருக்கு என்ன சன்மானமாகக் கொடுத்தோம்? அடியும் உதையும் சிலுவை மரணத்தையுமல்லவா பதிலாகக்கொடுத்தோம்.

நன்மை புரிந்தவருக்குத் தீமைபுரிவதுதான் மனித இயல்புபோலல்லவா தோன்றுகின்றது. இனியாவது எம்மை மறந்து அவரிடம் செல்வோமா? மனிதனைப் போல் உண்டார், உறங்கினார், உடுத்தினார். ஆனால் உலகம் கொடுத்தது என்ன? கன்னத்தில் அறையும், கரத்தில் பரிகாசக்கோலும். அதுமட்டுமா? சிரசில் முள்முடியும், தோளில் சிலுவையும். அவர் மறுத்தாரா? இல்லை அணைத்தார். கடவுளுக்கு கருத்திலே செயலிலே கள்ளமறியாத கருணைவள்ளலுக்கு உலகம் இப்படியான சன்மானத்தைக் கொடுத்தால் பாவத்தில் பிறந்து வளர்ந்த நாம் அதில் மேலானதை எதிர் நோக்கலாமா?

"பச்சை மரத்தின் கதி
இதுவானல்—ஐயோ
பட்ட மரத்தின் கதி
எதுவாகுமோ?
தேவபரனின் கதி இது
வானல்—ஐயோ
மனித இனத்தின் கதி
எதுவாகுமோ?

ஆகவே உலகத்தைக் கண்டு திணறாமல் உண்மைக் கடவுளைக் கண்டு பின்பற்றுவோமாக.

யேசுபரனும் நம் தேவபரன் எம்மேல் கொண்ட மட்டற்ற அன்பால் மண்ணுலகமாமிதனைத் தமது இன்னுலகமெனக் கழிக்க இவ்வுலகில் மனிதனாக உதித்து ஓர் சேவகனைப்போல் தம் வாழ்நாட்களை ஓட்டிப் படாதபாடுகளைப்பட்டு அப்பாடுகளின் பலனாக இன்று பரகதி அடைந்தது உலகினுறை மனித இனமனைத்திற்கும் மகிழ்ச்சி பொங்கும் செய்தியல்லவா?

பாடுபட்டவனுக்கல்லவா
பட்டம்
கேட்டவனுக்கல்லவா
கிட்டும்
தட்டியவனுக்கல்லவா
திறக்கும்
தேடியவனுக்கல்லவா
கிடைக்கும்

உன்னதமானவரின் சுதன் உயர்த்திய கரங்களுடன் நமக்கு வழிகாட்ட எழுந்தருளியிருக்கின்றார். அவரின் உயர்த்திய கரங்கள் நமக்கு என்னத்தை உணர்த்துகின்றனவோ? அவரின் மூன்று உயர்த்திய விரல்களும்

1. உலகத்தை வென்றார்
2. சாவை வென்றார்
3. சகல சத்துருக்களையும் வென்றார்.

என்பதை உணர்த்துவதைப் போலல்லவா விளங்குகின்றன.

உலகத்தைக்கண்டு பயந்து முன்வைத்த அடியைப் பின்வாங்காமல் உண்மைக் கடவுளைக்கண்டு அவரின் அறநெறிகளைப் பின்பற்றுவோம்.

"கண்ணின்றி ஓர் உறுப்
பில்லை—எம்
பரனின்றி ஓர் வாழ்வில்லை
அவர் துணையின்றி ஒருவாழ்
வும் நமக்கில்லையே, ஆகையால்,

வாழ்வளிக்க வந்த
வள்ளலே — எமக்கு
வாழ்வளித்துத் தந்த
வள்ளலே!
வன்கொலையாம் புரிந்த
மனிதனிற்கும் — நல்
வழி வகுத்துத்தந்த
வான்பரனே
உம் வாழ்வையே கண்டு
பின்பற்ற — எமக்கு
உம் வாழ்வையே
அர்ப்பணம்செய்தீரே
உலகம் அன்றுமுமை
வெறுத்ததே ஆனல்
உலகை வென்ற
உத்தமனே
உண்மை ஒளியைத்
தந்தவரே — நல்
உடந்தையாய்
எமக்கிருந்தவரே
உம்மையே கண்டு
பாவிக்க — எமக்கு
உதவி அருள்தனைப்
பொழிவீரே.

# இலங்கைக் கத்தோலிக்க திருச்சபை

ஆங்கில மூலம்: மறைத்திரு. சைமன் கிறகோரி பெரோரா, யே. ச.
தமிழாக்கம்: நெடுந்தீவு, ம. மரியதாசன்.

(தொடர்ச்சி)

கோட்டை இராச்சியம் போர்த்துக்கீசரின் கைக்கு மாறியவுடனே யாழ்ப்பாண இராச்சியமும் அதனுடன் இணைக்கப்பட்டது. இந்த இணைப்பு ஏற்படுவதற்கு முன்னரே யாழ்ப்பாணத்தில் கிறீஸ்தவ சமயம் நுழைந்துவிட்டது. சுதேச மன்னர்கள் ஆட்சியிலும் கூட அங்கு தேவாலயங்கள் நிறுவப்பட்டிருந்தன. குருமாரும் கடமையாற்றிவந்தனர். நாடு முழுவதும் போர்த்துக்கீசர்களின் ஆளுகைக்குட்பட்டதும் பழிவாங்கும்படலமும் ஆரம்பமாயிற்று. மக்களைக் கத்தோலிக்கராக்க வேண்டுமென்ற எண்ணம்கொண்ட போர்த்துக்கேயர்கள் பலாத்காரம் என்று கருதக்கூடிய அளவுக்குச் சில ஆபத்தான முறைகளைக் கையாளத் தொடங்கினர். கிறீஸ்தவ போதனைக்குத் தாங்களாகவே செவிசாய்க்க வேண்டுமென்றநிலையை ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இவர்கள் மக்களைக் கடமைப்படுத்திவந்தனர். செவிசாய்க்கத் தவறியவர்களும் செவிசாய்க்க விடாது தடை செய்து வந்தவர்களும் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டனர். நாட்டு மக்களைக் கிறிஸ்தவர்களாக மாற்றவேண்டுமென்பது கவர்னரின் விருப்பமாக விருந்தபடியினால் இத்தகைய வழக்கத்திற்கு மாறான செயல்கள் சில வேளைகளில் நடந்திருக்கக் கூடும். யாழ்ப்பாணத்தின் முதலாவது கவர்னராக நியமனம் பெற்றவர் மற்றவர்களைப் போலல்லாமல் மக்கள் நலனில் உண்மையான நாட்டங் கொண்டிருந்தார். இவற்றிற்கு நேர்விரோதமான முறையில் கோட்டை இராச்சியத்தில் காரியங்கள் நடைபெற்றுவந்தன. மதம் மாறியவர்களுக்குக் கொடுமைசெய்வதைக் குருக்கள் தடுப்பரெனப் பயந்த அதிகாரிகள், மக்கள் கிறிஸ்தவர்களாக மாறுவதைத் தடை செய்துகொண்டிருந்தனர். இவர்கள் குருமார்மீது வெறுப்புக் கொண்டதுமன்றி, திருச்சபையின் அலுவல்களிலும் தலையிட்டுக் குருமாரைத் துன்புறுத்தியும்வந்தனர். அத்துடன் குருக்களின் சொத்துக்களையும் சூறையாடி வந்தனர்.

சிலகாலமாக இப்படிப்பட்ட செயல்கள் நடைபெற்றுக் கொண்டே வந்தன. போர்த்துக்கீச கிறிஸ்தவர்கள் கையாண்ட முறைகளனைத்தும் தேவ கோபாக்கினைக்கு வழிவகுத்தன. போர்த்துக்கீசர்களின் பரமஎதிரிகளான ஒல்லாந்தரின் பொறுப்பில் இலங்கையை ஒப்படைப்பதற்கு இறைவன் சித்தம்கொண்டார். 1640-ம் ஆண்டு காலி, நீர்கொழும்பு ஆகிய பட்டினங்கள் ஒல்லாந்தரின் கைவசமான போது அங்கிருந்ததேவாலயங்களுக்கு அவர்கள் இழைத்த சேதங்களுக்காக அவர்களைத் தண்டிக்க வேண்டுமெனக் கொச்சிப் பட்டினத்தில் வாழ்ந்த யேசுசபைச் சகோதரொருவர் ஆண்டவனிடம் வேண்டுதல் செய்துகொண்டிருந்தார். அப்பொழுது அவருக்குக் கனவிலோர் உருவம் தோன்றி, போர்த்துக்கீசரைத் தண்டிப்பதற்காகவே ஒல்லாந்தரை இறைவன் கருவியாகப் பாவிக்கிறாரென்றும், ஒல்லாந்தரின் மனந்திரும்புதலுக்காகச் செபிக்குமாறும் ஆறுதல் கூறியது. "இந்த வேலை முற்றுப் பெற்றவுடன் நீரிலகப்பட்ட உப்பைப்போன்று அவர்கள் மறைந்துவிடுவர்" என அந்த உருவம் மேலும் தெரிவித்ததாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஒல்லாந்தர் காலத்திலேற்பட்ட வேதகலாபத்தியில் புடம்போட்டு—உறுதியாக்கப்பட்டு — மேன்மையாக்கப் பட்டு, அடக்குமுறையென்ற குகையிலிருந்து வெளியேறிய விதத்தைத்தவிர்ந்த வேறெந்த மகிமையான விடயமெதுவும் இலங்கைக் கத்தோலிக்க சரித்திரத்தில் காணப்படாதிருந்த போதிலும், ஒல்லாந்தர் இந்த நாட்டைவிட்டு விரட்டப்படுவதற்கு நெடுங்காலத்திற்கு முன்னர் யேசுசபைக் குருவானவரால் எழுதப்பட்டு வெளியிடப்பட்ட புத்தகமொன்றில் தடித்தஎழுத்தில் குறிப்பிடப்பட்டிருந்த யேசுசபைச் சகோதாரின் சொந்தக் கையெழுத்தில் வரையப்பட்ட இந்தக் கனவுக்காட்சியானது போதுமான அளவு உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. ஒல்லாந்தசீர்திருத்த மதத்திற்கு மாறியவர்கள் நீரிலகப்பட்ட உப்பைப் போன்று மறைந்து போனதைப்போல வேறெந்த மதத்தினரும் இலங்கையில் அதிவிரைவில் அழிந்தொழிந்து போகவில்லை.

போர்த்துக்கீசர் இந்த நாட்டைவிட்டுச்சென்றதும் (1656 ண்1658) இலங்கைத்தீவு முழுவதிலும், குறிப்பாக ஒல்லாந்தரின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களில் ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் அங்குமிங்குமாகச் சிதறிக் காணப்பட்டனர். புதிதாக மதம் மாறியவர்கள், மதம்மாறியோரின் பிள்ளைகள், இந்நாட்டில் குடியேறிய போர்த்துக்கீச சந்ததியினர் முதலானோர் இவர்கள்மத்தியில் காணப்பட்டனர். கத்தோலிக்க திருச்சபையின் வேலையைக் குறைப்பதற்காகவும் கத்தோலிக்கர்களை மதமாற்றம் செய்வதற்காகவும் கத்தோலிக்க கோவில்கள் யாவையும் ஒல்லாந்தர் கைப்பற்றி அவற்றை அனுசாரப் படுத்தினர். மரண தண்டனையை ஆயுதமாகப் பாவித்து, கத்தோலிக்க குருப்பிரசாதிகளை விரட்டியடித்தனர், கத்தோலிக்க வழிபாட்டுமுறை முற்றாகத் தடை செய்யப்பட்டது. ஒல்லாந்தரின் சமயாசாரப்படி ஞானஸ்நானம் பெறுமாறும், கலியாணம் முடிக்குமாறும், மரித்தோரை அடக்கம் செய்யுமாறும் கத்தோலிக்கர்கள் நிர்ப்பந்திக்கப் பட்டனர். மதமாற்றம் நடைபெறும் பாடசாலைகளுக்குப் பிள்ளைகளை அனுப்பிவைக்குமாறும் கத்தோலிக்கர்களை நிர்ப்பந்தித்தனர். மதத்தை மறுதலிப்பதற்குத் தூண்டுதலளிக்கக் கூடிய முறைகளும் கையாளப்பட்டுவந்தன.

ஆனால், சருவேசுரன் தமது திருச்சபையைக் கைவிடச் சித்தம் கொள்ளவில்லை. பொற்கொல்லன் எவ்வாறு தங்கத்தைப் புடம் போடுகிறானோ அவ்வாறாகவே தமது திருச்சபையையும் புடம்போட இறைவன் திருவுளம் கொண்டார். அவர் தமது அருட்கொடைகளை ஏராளமாகக் கொடுத்தார். இளம் பராயத்தினர்க்கு வேத அறிவை ஊட்டி, முதியோர்க்கு வசதியை ஏற்படுத்தக்கூடிய குருக்களும், கோவில்களும், தேவதிரவிய அனுமானங்களும் இல்லாதிருந்த நேரத்தில் ஏராளமான கத்தோலிக்கர்கள் —முதலாவதாகப் போர்த்துக்கீச பரம்பரையினரும் அதற்கடுத்தபடியாகச் சிங்கள – தமிழ்க் கத்தோலிக்கர்களும் இந்த நாட்டிலுள்ள வேறெந்த மதத்தினராலும் சரித்திரத்தில் காணமுடியாத விதத்தில் தமது மதத்தில் நிலைத்திருந்தனர். குற்றப்பணம், கசையடி, சிறைக்கோட்டம், உத்தியோக மறுப்பு என்பவற்றின் மூலம் கத்தோலிக்கர்களின் விசுவாசத்தைத் தகர்க்க முடியாதிருந்தது. அடக்குமுறையிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக அநேக கத்தோலிக்கர்கள் கண்டி இராச்சியத்திற்கு இடப்பெயர்ந்தனர். இராச்சியத்தின் தெற்கெல்லையிலுள்ள இரத்தினபுரி, கெண்டன்கமுவ, றுவான்வலை, சீதவாக்கை போன்ற இடங்களிலும் கத்தோலிக்க குடும்பங்கள் குடியிருத்தப்பட்டன. இவ்வேளையில் ஒல்லாந்தரின் பிரதேசத்தில் வாழ்ந்துவந்த கத்தோலிக்கர்கள் இரகசியமான முறையில் மதவழிபாடுசெய்துவந்தனர்.

[வரும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வையகத்தில் வைகாசி

— F.C. வேதநாயகம்

பரமதேவனின் பரலோக விஜயம் வையகத்தில் வைகாசியில் கொண்டாடப்படுகிறது. பரிசுத்த திரித்துவத்தின் மாட்சி அவரைச் சூழ்ந்து ஒளிரும் அந்தநேரம், "நீங்கள் உலகெங்கும் பேய்ச் சுவிசேஷத்தைப் போதியுங்கள்" என்று கடைசிக் கட்டளையைக் கொடுத்து விண்ணகமேறியதை வைகாசியில் கொண்டாடுகிறோம். அதுமட்டுமல்ல............

வைகாசிமாதம் வையகத்தில், வனிதையருள் வடிவுக்கே வணக்கமாதமாக்கப்பட்டது. அவ் வடிவழகே வல்லவ தேவனின் தாயாகிய மரியம்மாள். "கன்னிகை", "அரசரின் வலப் பக்கத்தில் வீற்றிருக்கும் அரசி" என்று அவளைப்பற்றிப் பல தீர்க்கதரிசனங்கள் கூறுகின்றன. அவளுக்கு வணக்கஞ் செலுத்தவே வையகத்தில் வைகாசி வந்தது எனலாம்.

ஏன் மரியம்மாளுக்கு இவ்வுன்னத அந்தஸ்தைக் கிறீஸ்தவர்கள் கொடுக்கவேண்டும் என்று நம்மினத்தவர்கள், பல கோடிக் கணக்கானோர் இன்றும் விடை காண முடியாத புதிராக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களே, சற்றுச் சிந்தியுங்கள்!

மரியம்மாள் உதவியின்றி ஆன்மாக்களை அணுக முடியாது. ஆதிமுதற்கொண்டு, உலகம் தோன்றுமுன் மரியம்மாள் கடவுளின் சிந்தனையில் இடம் பெற்றிருந்தாள். கடவுள்தாமே முதன் முதல் அவளைப்பற்றி யறிவித்தார். அவளுடைய மேன்மை மிகப் பழமையானது. உலகந் தோன்றுமுன் அதுதோன்றிற்று. ஆதிமுதற்கொண்டே பிதாவாகிய கடவுளின் சிந்தனையில் உலக இரட்சகரோடு அவள் இணைந்திருந்தாள். மனுக்குல மீட்பரின் வாழ்க்கையில் அவளுக்குப் பங்கிருந்தது. மரியம்மாளின் உதவி கடவுளுக்குத் தேவையா என்ன?...... யேசுவின் மனித அவதாரமின்றியே கடவுள் மனிதனை மீட்டிருக்கலாம். அவ்வாறே மரியம்மாளின் உதவியின்றிக் கடவுள் செயலாற்றியிருக்கலாம். ஆனால், ஆண்டவன் கட்டளை வேறாகிவிட்டது.

மனுக்குல மீட்பரைப் பற்றிய திட்டம் வகுக்கப்பெற்ற அந்தமுதல்விநாடிதொட்டே மரியம்மாள் அவரோடு இணைந்திருந்தாள். "உனக்கும் பெண்ணுக்கும், உன் வித்துக்கும் அவள்வித்துக்கும் பகையை மூட்டுவேன்; அவள் உன் தலையை நசுக்குவாள்" (ஆதியாகமம் 3:15). இது ஓர் தீர்க்கதரிசன வாக்கியம். மனுக்குலஇரட்சகரைப்பற்றி முதன் முதல் வாக்குறுதிதரப் பெற்ற வாக்கியம். கடவுள் சொன்ன வார்த்தை இது. பிறர் அனைவருக்கும் மேலானவள் மரியம்மாள். ஆனால், இரட்சகருக்கு அவள் கீழ்ப்பட்டவள். உலகவரலாற்றில் எந்த அரசரோ, தலைவரோ, அப்போஸ்தலரோ எவராகிலும் உலக இரட்சகரோடு மரியம்மாளைப்போல் அவ்வளவு நெருங்கி ஒன்றித்திருக்கவில்லை.

சம்மனசு கூறிய மங்களவார்த்தையும் மரியாளுக்கு உரிய சிறப்பிடத்தைச் சுட்டிக் காட்டுகின்றது. தீர்க்கதரிசனங்கள் நிறைவேற வேண்டிய நேரம் வந்தது — கடவுள் சித்தப்படி மரியாள் தன் அலுவலைத் தொடங்கும் நேரம் வந்தது. உலகவரலாற்றில் நிகழ்ந்த மிகப் பெரிய சமாதான ஒப்பந்தப் பேச்சு நடைபெறுகின்றது. கடவுளுக்கும் மனுக்குலத்திறகும் இடையே நடைபெற்ற அந்த ஒப்பந்தப் பேச்சுக்கு "மங்களவார்த்தை" என்று பெயர். சம்மனசுகளுள் மிகச் சிறந்த ஒருவர் கடவுளின் பிரதிநிதியாகவும், பூவுலகில் கன்னிப் பெண் ஓர் இளநங்கை — அவள்தான் மரியம்மாள் மனுக்குலத்தின் பிரதிநிதியாகவும் அந்த ஒப்பந்தப் பேச்சில் கலந்துகொண்டார்கள். அன்று அந்த மரியாளின் கரங்களிலிருந்தது மனுக்குலத்தின் கதி. சம்மனசு மனித அவதாரத்தைப் பற்றி அவளுக்குக்கூறினார். ஆனால், அதற்கு இசையுமாறு அவர் அவளை வலுவந்தம் செய்யவில்லை. அவளுடைய மனச் சுதந்திரத்தை அவர் மதித்தார். அன்று மனுக்குலத்தின் கதி சிறிதுநேரம் உறுதியற்று ஊசலாடிக்கொண்டிருந்தது. அக் கன்னிகை உடனே தன் சம்மதத்தைத் தெரிவித்துவிடவில்லை ... ... சற்றுநேரம் மௌனம் ... ... பிறகு "உம்முடைய வார்த்தையின்படியே எனக்குஆகக் கடவது" என்று அவள் கூறினாள். அந்த வாக்கியம் கடவுளை உலகிற்குக் கொண்டு வந்தது மனுக்குலத்தின் மிகப் பெரிய சமாதான ஒப்பந்தத்திற்குக் கையொப்பமிட்டது. அன்று மரியாள் தாயாக இருக்க மறுத்திருந்தால், நமது தேவன்(கிறீஸ்துநாதர்—சுதனானவர்) மனித அவதாரம் கொண்டிருக்க மாட்டார் என்று ஹெட்டிங்கர் ( Hettinger ) என்னும் நூலாசிரியர் பின்வருமாறு கூறுகிறார்: "அவளுடைய சம்மதம் அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. அவள் சொன்ன 'உம்முடைய வார்த்தையின்படியே ... ...' என்ற வாக்கியம் பழைய உலக வரலாற்றை முடிவுறச் செய்தது ... புதிய வரலாறு பிறந்தது. விண்ணுலகை மண்ணுலகோடும், கடவுளை மனிதனோடும் இணைக்கும் வாக்கியம் அது."

மரியம்மாள் இன்றி உண்மையான கிறீஸ்துவம் இல்லை. இந்த ஒப்பற்ற நன்கொடைக்குக் கைம்மாறாக எல்லாத்தலைமுறை மக்களும் அவளைப் 'பாக்கியவதி' என்று போற்ற வேண்டும்... அதையும் வையகத்தில் வைகாசியில் வணக்கத்துடன் செய்வோம்.

# வாக்கும் எமது போக்கும்

விரைகிறது தேர்தல் — தொடர்கிறது கட்சிகளின் மோதல்— சூடுபிடிக்கிறது பிரசாரம் — மேடைப் பேச்சிலே காரசாரம்— தமிழ் இனத்துக்குள் பலபிளவு; எதற்கும் வேண்டும் ஓர் அளவு. இன்று நாட்டிலே தேர்தலே பேச்சு; அதுதான் எம்எதிர்காலமூச்சு. சுவரிலே தார்த்தெருவிலே எங்கும் எதிலும் தேர்தல் விளம்பரங்கள்.

இவையனைத்தும் எதிலே அடங்கியுள்ளன? ஆம், நாம் இடும் (×) இதற்காகத்தான். எதிர்காலத்தில் நாட்டின் நற்றலைவரை, நல்லரசை உருவாக்குவது இந்த (×)தான். இல்லை, அதைஇடும் எம் கரங்கள் தான். இல்லை, அதனை இடஏவும் மனச்சாட்சிதான். முதலில் பெரும் பிரச்சினை ஒன்று. நாம் அனைவரும் வாக்களிக்க வேண்டும்தானா? ஆம், நிச்சயமாக நாம் வாக்களிக்க வேண்டும். நாட்டின் எதிர்கால அரசை நிர்ணயிக்கும் பொறுப்பு எம்மிலேதான் தங்கியுள்ளது. எனவே வாக்குரிமையுள்ள ஒவ்வொருவரும் வாக்களிக்கவேண்டியது அவர்களது தலையாய கடமை. அன்றியும் ஜனநாயக நாட்டிலே எனக்கிருக்கும் உரிமையைப் பயன்படுத்தாதுவிடுதல் எவ்வளவு மடமைத்தனமான செயலாகும்.

இதனைவிடுத்து நம்மில்பலர் இராமன் ஆண்டாலென்ன இராவணன் ஆண்டாலென்ன இதில் நமக்கென்ன என்றநிலையில் இருக்கின்றனர். இது எத்தகைய மடமைத்தனமான செயல்என்பதை அவர்கள் உணர்வார்களானால் இத்தகைய இழிந்தநிலையில் இருக்க மாட்டார்கள். எனவே நாட்டின் நல்லரசை நிச்சயப்படுத்துவது எமது மேலான பெரும் பொறுப்பு என்பதை உணர்வார்களாக.

வாக்குரிமையைப் பயன்படுத்த வேண்டும் என்பதைப் பார்த்தோம். இதேநேரத்தில் யாருக்கு வாக்குக்கொடுக்க வேண்டுமென்ற கேள்வி எழத்தான் செய்யும். இதுவரைநாம் பொன் எனப் போற்றத்தகும் வாக்கைப் பன்முறைகளில் ஆட்சிமன்றத் தேர்தல்களுக்கும், உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களுக்கும் உபயோகித்து அவற்றின் நன்மைதீமைகளை அனுபவித்திருப்போம். நமதுநாடு சுதந்திரமடைந்து 21வருடங்கள் ஆகின்றன. இதுவரை எமதுநாட்டின் கல்வி, பொருளாதார வளர்ச்சி எந்நிலையில் உள்ளது; மக்களின் அன்றாட வாழ்க்கை எப்படி அமைந்துள்ளது? மக்கள் அடக்கி ஒடுக்கப் படுகின்றனரா? அவர்கள் கஷ்டங்கள் நீக்கப்படுகின்றனவா? என்பவற்றை ஆராய்ந்துபார்த்து ஏற்றவர்களுக்கு வாக்களிக்க வேண்டும். இன்றைய அரசியல் நிலைக்கு யாரை அனுப்பவேண்டும்? அதற்குத் தகுந்தவர் யார் என்பவற்றைத் தீர்மானித்து வாக்களிப்பது எம்மேல் சுமத்தப்பட்ட பாரிய சிலுவை போன்றது.

பொன்னெனப் போற்றப்படும் இல்லை— எமது கண்ணெனத் தகும் வாக்கை நம்மில்பலர் விளையாட்டுப் பொருளாகக் கணிக்கிறோம். பணத்திற்கும் சிலர் விற்பனை செய்கின்றனர். என்ன மடைமைத்தனம். வாக்குரிமை என்னகடைச்சரக்கா? மதுவிற்குக்கூட வாக்குரிமையை அடகுவைக்கின்றனர். என்னே அவர்கள் மதியீனம்! எனவே பணமும் பொருளும் அல்ல, எம்மனமும் கடவுள் அருளும்தான் எம்மை வழி நடத்த வேண்டும்.

எமதுவாக்கு ஒன்றினால் என்ன வந்துவிடப் போகிறது என்று எம்மில் பலரும் எண்ணக்கூடும். ஆனால் அந்தஒரே ஒரு வாக்குத்தான் ஒருவரின் தோல்விக்கும், ஏனையவரின் வெற்றிக்கும் காரணம் என்பதை நாம் அறியவரும்போது தான் அதற்கு வருத்தப்படுவோம். எமக்கிருக்கும் உரிமையைப் பயன்படுத்துவது நாட்டிற்குரிய நற்தொண்டரைத் தெரிவதுபோன்றவற்றிற்காக நாம் நிச்சயம் வாக்களித்தே தீரவேண்டும். சிறிது கஷ்டங்கள் ஏற்பட்டாலும் அவற்றைப் பொருட்படுத்தாது நாம் வாக்களித்தே தீரவேண்டும். குடும்பத்திலே, நாட்டிலே, கிராமத்திலே பிரிவுகளையும், பிளவுகளையும் ஏற்படுத்தக் கூடிய சந்தர்ப்பத்தை உண்டு பண்ணும் சக்தி இந்த வாக்குக்கு உண்டு. எனவே இந்த விடயத்தில் மிகவும் கவனமாயிருக்கவேண்டும். நன்மையான விடயத்திற்கு உபயோகிக்கப்படும் வாக்கு தீமையான விடயத்திற்குப் பயன்படுத்தப்பட்டால் அதனால் எவர்க்கும் பயனே இல்லை.

ஆகவே எதிர்வரும் தேர்தலில் நாமனைவரும் வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று நமது மனச்சாட்சித் தீர்ப்பின்படி நாம் விரும்பிய ஒருவருக்கு எமது பொன்னான வாக்கை அளித்து நாட்டைவளப்படுத்த நம்மாலான பணிகளைச் செய்வோமாக.

இ. பேர்னாட்

# புனித ஆவியில் வாழ்வோம்

"வாழ்க்கையில் வெற்றியும் இன்பமும் பெறவேண்டுமாயின் பேசாமல் அமைதியாய் இரு."

(விஞ்ஞானமேதை அல்பேட் ஐன்ஸ்டின்)

அமைதியான இடத்திலே ஆண்டவன் உறைகின்றான், என்பர் பெரியோர். ஆம் பேசாமல் அமைதியில் இருப்போர்க்கு இறைவன் பிரசன்னமாகின்றார். அமைதியில் ஆழ்ந்து செபிக்கும்வேளை அவர் தோன்றுவார் என்பது புனிதர்கள் கண்ட உண்மை.

அமைதியில் செபித்த பக்தர்கள் (அப்போஸ்தலர்கள்) முன் புனித ஆவி பிரசன்னமானார். புனித ஆவியானவர் தினத்தன்று (பெந்தக்கோஸ்த் தினம்) அதே புனித ஆவி நம் ஒவ்வொருவர்மீதும் பிரசன்னமாகிறார் ஞானஸ்நானம் என்னும் அருட்சாதனத்தின்மூலம், பின்பு உறுதிப்பூசுதல் சடங்கின்போது. எனவே எமது உள்ளத்தில் வதிகிறார் அருள் வழங்கும் புனித ஆவி. நமது உள்ளத்தில் பிரசன்னமாகிறார் அன்பு வழங்கும் புனித ஆவி. ஆவியின் செயலால் நாம் ஆவிக்குகந்த ஆலயங்கள் ஆனோம். உள்ளம் என்ற ஆலயத்தில் உறைபவர் புனித ஆவி. உள்ளத்தில் உறையும் உயிரொளியை உதறித்தள்ளமுடியும் மனிதனால். எதிர்த்துநிற்கமுடியும் அவனால்; "புனிதஆவியை நீங்கள் எப்பொழுதும் எதிர்த்து நிற்கிறீர்கள்" என்று கூறுகிறார் புனித லூக்காஸ் (அப். நட. 7-51).

மகிழ்ச்சியூட்டும் மகிபனை மனம் நோகச் செய்யமுடியும் மானிடனால் (எபே. 4-30). புண்ணிய பாலன் நல்கும் புனித ஆவியைப் புறக்கணிக்க முடியும் மனிதனால் (1 தெச. 4-7, 8). மறைநூல் கூறுவது போல் பரிசுத்த ஆவியை மனிதன் எதிர்த்து வாழமுடியும். அவரைவிட்டு விலகி வாழமுடியும். அவருக்குத் தன் உள்ளத்தில் இடம் அளிக்காமல் வாழமுடியும்.

வானியில் இருந்து நீர் ஊற்றப்படுகிறது. கீழே உள்ள பாத்திரம் திறந்து இருந்தால் தான் பாத்திரத்துள் நீர் விழும். மூடி இருப்பின் பாத்திரத்தில் சேராது வினையமாகும். அவ்வாறே புனித ஆவிக்கு நமது உள்ளத்தினைத் திறந்தால்தான் அவர் அதில் தங்குவார்

பரிசுத்த ஆவியில் வாழ்வது ஓர் பெரிய போராட்டம் என்று பகர்கிறார். பரிசுத்த பவுல் அப்போஸ்தலர் = கலா 5-17—26; 6-7—8 = உலக ஆசை, சரீர இச்சை, அலகையின் சூழ்ச்சி இவைகளை எதிர்த்து வாழ்வது மிகக் கடினம். அவர் உதவியின்றி இப் போராட்டத்தில் வெற்றி காணமுடியாது. எனவே நமது வாழ்வை புனித ஆவியில் அமைக்கவேண்டுமென்றால், நாம், உடலிச்சைப்படி நடவாமல் ஆவிக்கேற்றவாறு நடக்கவேண்டும். அதற்கு நாம்:

முதல் இறைவனின் பிள்ளைகளாக வாழவேண்டும். "கடவுளின் ஆவியால் யார் இயங்குகிறார்களோ அவர்களே கடவுளின் மக்கள்" என்றார் புனித சின்னப்பர் (உரோ. 8-14).

※ நாம் புனித ஆவியின் ஆலயம். எனவே நம் உடலைப் புனிதமாக பாதுகாத்துவர வேண்டும். இதை விளம்பும் புனிதர். "நீங்கள் கடவுளின் ஆலயம் என்றும், கடவுளின் ஆவி உங்களுக்குள் குடிகொண்டிருக்கிறார் என்றும் உங்களுக்குத் தெரியாதா?" (1 கொரி. 3-16). கடவுள் நம்மை அசுத்தத்துக்காக அழைக்கவில்லை. பரிசுத்தத்திற்காகவே அழைத்திருக்கிறார்.

※ அடுத்து புனித ஆவியில் நாம் அன்பாயும், ஒற்றுமையாயும் வாழவேண்டும். 'அன்பு செய்யாதவனோ கடவுளை அறிவதில்லை. ஏனெ

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவழிபாட்டின் நாள்காட்டி
### வைகாசி — 1970

| | | | |
|---|---|---|---|
| 17 | ஞாயிறு | பரிசுத்த ஆவியானவர் | [சி] |
| 18 | திங்கள் | தினப்பூசை | [ப] |
| 19 | செவ்வாய் | ,, | [ப] |
| 20 | புதன் | ,, | [ப] |
| 21 | வியாழன் | ,, | [ப] |
| 22 | வெள்ளி | ,, | [ப] |
| 23 | சனி | ,, | [ப] |
| 24 | ஞாயிறு | திரித்துவத் திருநாள் | [வெ] |
| 25 | திங்கள் | தினப் பூசை | [ப] |
| 26 | செவ்வாய் | புனித பிலிப்புநேரியார் | [வெ] |
| 27 | புதன் | தினப் பூசை | [ப] |
| 28 | வியாழன் | ,, | [ப] |
| 29 | வெள்ளி | ,, | [ப] |
| 30 | சனி | ,, | [ப] |
| 31 | ஞாயிறு | நற்கருணைநாதர் விழா | [வெ] |

*சத்தியவேத பாதுகாவலன்*

# தூய ஆவியின் பிரசன்னம்

பாஸ்கா ஞாயிறு, ஆரோகணத் திருநாள் ஆகிய இரு பெரும் திருநாட்களைத் தொடர்ந்துவரும் பெந்திக்கொஸ்த் தினமானது போதியளவு அவதானிக்கப்படாமலேயே கடந்துபோய் விடுகின்றது. ஆனாலும் இப் பெருநாள் திருச்சபையின் வழிபாட்டு வாழ்வில் பாஸ்காவுக்கு அடுத்தபடியாக உள்ளதென்று கூறலாம். பாஸ்காவின்போது ஆரம்பித்த மீட்பு பெந்திக்கொஸ்த்தன்றே பூரணமாகியது. கிறிஸ்துநாதர் பாடுபட்டு மனுக்குலத்தை மீட்டார்; மரித்து உயிர்த்தார். ஆனால் அவர் மனிதனாக அவதரித்தபடியால், அவர் தம் மனித உடலுடன் என்றும் எம்மோடு வாழ்வது அசாத்தியமாயிற்று. ஆகவே ஒருபுதிய விதத்தில் அதாவது தமது பரிசுத்த ஆவியின்மூலம், அவர் வாக்குப் பண்ணியபடியே என்றும் வாழ்கிறார்.

முதல் பெந்திக்கொஸ்த் தினத்தன்று புனித ஆவியால் நிரப்பப்பெற்ற அப்போஸ்தலர் பல்வேறு மொழிகளில் பேசும் அதிசய வரத்தைப் பெற்றனர். இன்று அதே தூய ஆவியானவர் வேறு பல வரங்களை அருளுகிறார். ஈற்றிலே தனிப்பட்ட கிறிஸ்தவனது வளர்ச்சியும் சரி, திருச்சபையின் வளர்ச்சியும் சரி அவரது போஷணையிலேயே தங்கியுள்ளது. மனிதனுக்கே இயல்பாயுள்ள குறைபாடுகளும், பலவித இடையூறுகளும் இருந்தபோதிலும் திருச்சபை இன்னும் மனிதனை உயர்த்தப் பாடுபட்டு வருகின்றதெனில், அது தூய ஆவியானவர் குறைபாடுள்ள கருவிகளைக் கொண்டும் தமது திட்டத்தை நிறைவேற்றுகிறார் என்பதையே காட்டுகின்றது.

கிறிஸ்துநாதர் சகல உண்மைகளையும் தம் சீடருக்குப் புகட்டும்பொருட்டு சத்தியத்தின் ஆவியை அவர்கள்மேல் அனுப்புவதாக வாக்களித்திருந்தார்; "சத்திய ஆவியானவர் வரும்போது அவர் உங்களை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துவார்." ஆகவே உலகில் எவ்வளவு தவறுகள் மலிந்தபோதிலும் திருச்சபையில் தூய ஆவியானவர் செயலாற்றிக் கொண்டுதானிருக்கின்றார். சிருஷ்டிப்பின் ஆரம்பத்தில் நீரின் மேல் அசைவாடிக்கொண்டிருந்த தேவனின் ஆவி, அச்சமும் கலக்கமும் நிறைந்த அப்போஸ்தலர் குழுவை தீரராக மாற்றிய இறைவனின் ஆவி, இடைவிடாது உலகை இறைவனது சாயலில் உருவாக்கிக்கொண்டிருக்கின்றார்.

பரிசுத்த ஆவியைப் பெற்ற தீர்க்கதரிசிகள் உலகத்தில் எதிர்ப்புக்கஞ்சாது, இறைவனது வார்த்தைக்கும், அவரது கற்பனைக்கும் சாட்சிபகன்றனர், ஆதிக்கிறிஸ்தவர் தம் விசுவாசத்திற்கு தம் இரத்தத்தால் முத்திரையிட்டனர். இன்று வாழும் கிறிஸ்தவர்கள் தமது சமய சத்தியத்தை வாழ்ந்து காட்டுகின்றார்களென்றால், ஒவ்வொரு காரியமும் தம்மை இறையன்பிற்கும் பிறரன்பிற்கும் இட்டுச் செல்லவேண்டுமென்பதை உணர்ந்து, அதை நடைமுறையில் கடைப்பிடிக்க அவர்களால் முடியுமானால் அது அவர்களில் வாசம் செய்துவரும் தூய ஆவியின் மூலமேயாம்.

# பரிசுத்த தந்தையின் குருத்துவ தங்க விழாவையொட்டி நம்மேற்றிராணியாரின் கடிதம்

**கிறீஸ்துநாதரில் எமது அன்பார்ந்த**
**குருப்பிரசாதிகளே, பிள்ளைகளே!**

நிகழும் வைகாசி மாதம் 29-ம் திகதி வெள்ளிக்கிழமை நம் பரிசுத்த தந்தை ஆறும் சின்னப்பரின் குருத்துவ தங்க யூபிலித் தினமாகும். மகிழ்ச்சிக்குரிய இச்சுப தருணத்தில் அவரின் பிள்ளைகளாகிய நாம் எல்லோரும் எம் அன்பார்ந்த தந்தையுடன் விசேஷ விதமாக ஒருமித்து எம் அன்பையும் அக்களிப்பையும் காட்டுவதுடன், தேவன் அவர் மூலமாக கடந்த 50 வருடங்களாக எங்கள் மேல் பொழிந்தருளிய எண்ணற்கரிய சகல வரப்பிரசாதங்களுக்காக நம் எல்லோரினதும் மனமார்ந்த நன்றியையும் தெரிவிப்போமாக.

அன்றியும், பரிசுத்த தந்தைக்காகவும் அவரின்கருத்துகளுக்காகவும் நாம் செபிக்கும் செபங்களை ஆழ்மையாக்கி அதிகரிப்பதற்கும், அச்செபங்களை உண்மையான விளக்கத்துடனும் பிள்ளைகட்குரிய அன்பு பிரமாணிக்கம் நிறைந்த மனப்பான்மையுடனும் செபிப்பதற்கும் தகுந்த தருணம் இதுவேயாகும். திருச்சபையின் வரலாற்றிலேயும், உலக வரலாற்றிலேயும் தன்னும், முன்னிராத இன்னல்களும் நிர்ப்பந்தங்களும் பொலிந்திருக்கும் இக்காலத்தில் 6-வது சின்னப்பர் உலகில் தமது பிரதிநிதியாக இருக்கவேண்டுமென்பது தேவனின் சித்தம். தீமையின் சேனைகளும் மண்ணுலக வாஞ்சைகளும் தலைவிரித்தாடும் காலம் இது. தமக்குள்ள நெருக்கடிக்கும் பொறுப்புகள், கடமைகளை உகந்த விதத்திலே நிறைவேற்றவும், நாளாந்தம் எழும் இன்னல்நிறை பிரச்சினைகளைத் தீர்க்கவும், திருச்சபையைத் தேவசித்தப்படி ஆண்டுநடத்தவும் வேண்டிய சகல அருட்கொடைகளையும் தேவன் அவர்மேல் மாரிபோற் பொழிந்து அவரைப் பாதுகாத்தருளும்படி தேவனை இரந்து மன்றாடுவோம்.

நமது ஆண்டவரில் நமக்குள்ள விசுவாசத்தைப் புதுப்பிப்பதற்கும், அவரால் என்றும் நிலைத்திருக்கும்படியாக ஸ்தாபிக்கப்பட்ட திருச்சபையையும் அதன் தலைவராக அவர் நியமித்த இராயப்பரை திடமனதுடனும், ஆர்வத்துடனும் ஏற்றுக்கொள்வதற்கும் பரிசுத்த தந்தையின் யூபிலிவிழா ஒரு தகுந்த தருணமாகும். எமது பரிசுத்த தந்தை சின்னப்பர் இராயப்பர் வழிவந்து தற்போதைய திருச்சபையின் தலைவராயிருந்து எங்களுக்குக் கிறிஸ்துவின் பிரதிநிதியாக விளங்குகிறார்.

ஆகையால், எங்கள் கிறிஸ்தவ சீவியம் அவரிலேயே முற்றாகத் தங்கியிருக்கிறது. கிறிஸ்துவின் போதனைகளை நமக்குப் படிப்பிக்கவும் சத்தியத்தின் பாதையிலே நமக்கு வழிகாட்டவும் நாம் அவரிலேயே முற்றாகத் தங்கியிருக்கவேண்டும்

யூபிலிக்கு ஆயத்தப்படுத்துவதற்காக இம்மேற்றிராசனத்திலுள்ள எல்லோரும் திருச்சபைக்காகவும் பரிசுத்த தந்தைக்காகவும் விசேஷவிதமாக மன்றாடுவதுமல்லாமல் எங்கள் ஆண்டவரிலும் அவர் ஸ்தாபித்த திருச்சபையிலும் எமக்குள்ள விசுவாசத்தையும் புதுப்பிப்போமாக.

எங்கள் அன்பின் அடையாளமாக ஒரு செபதப இயக்கத்தை ஆரம்பித்து, பரிசுத்த தந்தையின் கருத்துகளுக்காக எத்தனை திருப்பலிகளில் பங்குபற்ற முடியுமோ அத்தனை திருப்பலிகளில் பங்குபற்றி, அதே நோக்கத்துடன் விசேஷ ஒறுத்தற் கிருத்தியங்கள் புரிவது வெகு நலனாகும். மரியாயின்சேனை மூலமாகவோ அல்லது வேறு பக்திச்சபை மூலமாகவோ இவ்வியக்கம் ஒவ்வொரு விசாரணைப்பங்கிலும் ஆரம்பிக்கலாம். இவ்விசேஷ கருத்துக்காக ஒவ்வொரு விசாரணைப்பங்கிலும் விசுவாசிகள் பங்குபற்றிய திருப்பலிகளின் முழுத்தொகையையும், மற்றும் செபங்கள் ஒறுத்தற் கிருத்தியங்களின் முழுத்தொகைகளையும் இனவாரியாகத் தொகுத்து கூடியசீக்கிரத்தில் எனக்கு அனுப்பிவிடுமாறு பங்குக்குரவர்களை வேண்டுகின்றேன். இஞ்ஞானப்பூச்செண்டு பரிசுத்த தந்தைக்கு எங்கள் யூபிலி அன்பளிப்பாக அனுப்பிவைக்கப்படும்.

1. இக்கடிதம் 1970 வைகாசி 24 ஞாயிற்றுக்கிழமையன்று எல்லாப் பங்குக் கோவில்களிலும் வாசிக்கப்பட்டு குறிப்புரை கூறப்படும்.
2. 1970 வைகாசி 31 ஞாயிற்றுக் கிழமைக்கு முந்திய மூன்று நாட்களில் எல்லாப் பங்குக் கோவில்களிலும், மடச்சிற்றாலயங்களிலும் இக்கருத்துக்காக விசேஷ செபங்களுடன் திரிதின ஆராதனை நடந்தேறும்.
3. 1970 வைகாசி 31 ஞாயிறு தினமன்று எல்லாப் பங்குக் கோவில்களிலும், மடச்சிற்றாலயங்களிலும் ஒவ்வொரு திருப்பலிக்குப்பின் "தெதேயு" என்ற சங்கீதம் பாடப்படும்.

தேவன் உங்கள் எல்லோரையும்
ஆசிர்வதிப்பாராக;

கிறீஸ்துநாதரிலும் அமலோற்பவ மரியன்னையிலும்
உங்களை நேசிக்கும்,

✠ **ஜே. எமிலியானுஸ்பிள்ளை, O. M. I.**
யாழ்ப்பாண மேற்றிராணியார்;

## சமூகத் தொடர்பு ...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சமூகத்தொடர்பு சாதனங்களும் இளைஞர்களும் என்பதே விசேஷ குறிக்கோளாகும். பரிசுத்ததந்தை இத்தினத்தன்று அனுப்பிய சுபசெய்தியில் சமூகத்தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்தி இளைஞர்களுக்குப்புத்திபுகட்டி, உலக சிக்கல்களை அவர்கள் விளங்கச்செய்து அவற்றைச் சீராக்க உத்தம மக்களாகவும், கிறிஸ்தவர்களாகவும் இளைஞர்களை உதவச்செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

## செவாலியர் தூசைப்பிள்ளை அருளானந்தத்தின் மறைவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சீரிய பண்புகளில் இவர்எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் மற்றோருக்கும் ஒரு மேல்வரிச் சட்டமாகத் திகழ்ந்தார். நாளாந்தம் திருப்பலியிற் பங்குபற்றி, நன்மை பெற்று, பின்னேரங்களில் நற்கருணை சந்தித்து,செபமாலை ஒதுவது இவரின் தவறாத வழக்கம்.

செவாலியர் அருளானந்தம் அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றும்சபை, திருஇருதய கூட்டம், சென்ற் வின்சென்ற் டீ போல் சபை, இன்னும்பல பக்திக்கூட்டங்களில் ஆர்வம் நிரம்பிய அங்கத்தவராகவும், அக்கிராசனராகவும் பல வருடங்களாகப் பணிபுரிந்தார். பாதுகாவலன் பத்திரிகையின் ஓர் அபிமானி மட்டுமன்றி சமய சம்பந்தமான கட்டுரைகளால் அதனைப் பரிமளிக்செய்துமவந்தார். சமூக சேவையிலும் ஈடுபட்டுச் சிலகாலமாக யாழ்ப்பாணப் பட்டினசபையின் அங்கத்தவராகவும், அதன் உபதலைவராகவும்சேவையாற்றினார்.

இவர் பலதுறைகளில் செய்த அளப்பரிய சேவைகளை மெச்சி பரிசுத்ததந்தை இவரை 1938-ம் ஆண்டு புரட்டாசியில் அர்ச். கிறகோரியாரின் கைற்பட்ட வரிசைக்கு உயர்த்தியருளினார். இந்தக் கௌரவத்தின் மகிமையையும் தகமையையும் உணர்ந்த மக்கள் மதஇன பேதமின்றி யாழ்ப்பாணத்திலே பல கொண்டாட்டங்கள் நடத்தினார்கள்.

செவாலியரின் மனைவி தங்கரத்தினம் பல ஆண்டுகளுக்கு முன்பே காலமாயினார். காலஞ்சென்ற வண. எஸ். ஆசீர்வாதம், ஓ. எம். ஐ. சுவாமியார் செவாலியரின் மூத்த சகோதரர். சகோதரி திருமதி ஞானமுத்து கமில்பிள்ளையும் காலமாகிவிட்டார். திருமதிகள் இரத்தினம் செல்வத்தம்புவும் மரியம்மா தம்புவும் மருமக்கள். மற்ற மருமக்களான திரு. சி. ஜே. வேதநாயகமும் திருமதி அன்னம்மா அலோசியசும் சீவந்தராயில்லை.

11-ந் தேதி சாயந்திரம் இவரின் அந்திமசடங்குகள் யாழ்ப்பாண மேற்றிரானக் கோவிலில் துணை ஆயர் அன்ரனி ஆண்டகையின் தலைமையில் பல குருமார், நூற்றுக்கணக்கான உற்றார், உறவினர், பழைய மாணவர் சமுகத்தில் நடந்தேறியபின் செவாலியரின் பூதவுடல் அன்னைமரியின் சேமக்காலையில் பூசிதமாக அடக்கம் செய்யப்பட்டது.

சமாதானத்தில் இளைப்பாறுவாராக.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. சீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1970 ஆம் ஆ வைகாசிமீ 16ஆம் உ சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி: "கத்தோலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி: 300 தாபிதம்: 1876.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org